

அலகு - 7

# சின்னச் சின்ன உதவிகள்

















## சொல்லுங்கள்

- காகத்தின் வீட்டில் யார் யார் என்னென்ன செய்கிறார்கள்?
- உங்களது வீட்டில் தினமும் நடைபெறும் வேலைகள் எவை?


## யார் யார் என்னென்ன வேலைகள்?

| அம்மா | அப்பா | நான் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

# காகத்தின் பூக்கடை



- உங்களது வீடுகளில் இதுபோல வருமானத்திற்காக ஏதேனும் தொழில்கள் செய்வதுண்டா?
    - முறுக்கு சுடுதல்
    -
    -
    -
    -
- குஞ்சுக் காகத்திற்குச் சும்மா இருக்கப் பிடிக்கவில்லை. பூக்களை அடுக்கி விளையாடியது. அடுத்த அடுக்கை வைப்பதற்கு அதற்கு உதவுங்கள்.



- குஞ்சுக் காகத்திற்கு விலையைக் கணக்கிட உதவுங்கள்.

| மாலையின் பெயர் | விற்றது | விலை (ஒன்றிற்கு) | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|---|
| ரோஜா மாலை | 4 | 5 ரூ. | |
| துளசி மாலை | 6 | 2 ரூ. | |
| மல்லிகை மாலை | 8 | 10 ரூ. | |

# ஒன்றாய் நாமும் செய்திடலாம்



குஞ்சுக் காகம் நான் என்னால்
முடிந்த வேலை செய்திடுவேன்
அம்மா வேலை செய்கையிலே
நானும் சேர்ந்து உதவிடுவேன்.

வீட்டின் முன்னே குவிந்திருக்கும்
குப்பைக் கூளம் அகற்றிடுவேன்
சாணம் தளித்து வாசலிலே
அழகாய்க் கோலம் போட்டிடுவேன்



அம்மா துவைத்த துணியெல்லாம்
எடுத்தே உலர வைத்திடுவேன்
உலர வைத்த துணியெல்லாம்
எடுத்தே மடித்து வைத்திடுவேன்.

அம்மா அப்பா இருவருமே
அன்பாய் வேலை செய்திட்டால்
வீட்டு வேலை எல்லாமே
விரைவாய் முடியும் அறிந்திடுவீர்!



- குஞ்சுக்காகம் அம்மாவிற்கு என்னென்ன உதவிகள் செய்கிறது?

## பாடலை முழுமையாக்கலாம்

**கண்ணே மணியே வா... வா... வா...**

**கடைக்குப் போகலாம் வா.. வா.. வா..**

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

- சில நாட்கள் கழிந்தபின் காகமும் கிளியும் சந்தித்தன. என்ன பேசியிருக்கும்?

